# 4. கைத்தொழில்

## 4.1. பொதுவான போக்குகள்

1995 இல் கைத்தொழில் வெளியீடு 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன், பொருளாதாரத்தில் வேளாண்மைத்துறை கொண்டிருந்த மேலாதிக்க நிலைமையை முதற்தடவையாகத் தயாரிப்புத்துறை பெற்றுக்கொள்வதற்கு உதவியது. 1995 இல் கைத்தொழில்துறையின் வளர்ச்சிக்கு ஏற்றுமதி சார்ந்த மற்றும் உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்கள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களினால் ஆதரவு வழங்கப்பட்டது. மொத்தத் தயாரிப்பு வெளியீட்டில் 82 சதவீதத்திற்கு வகைகூறும் தொழிற்சாலைக் கைத்தொழில்கள் 1995 இல் பொருளாதார வளர்ச்சியில் 28 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

கடந்த அண்மிய காலத்தின் செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில், முக்கியமாக 1994 ஆம் ஆண்டின் தேர்தலுடன் தொடர்புபட்ட நிச்சயமற்ற தன்மைகள், அரசாங்க மாற்றத்தைத் தொடர்ந்து காணப்பட்ட தொழிலாளர் அமைதியின்மை என்பனவற்றின் விளைவாக 1994 இல் தாழ்ந்த மட்டத்தினைக் கொண்டிருந்த கைத்தொழில்துறை 1995 இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சி விசையுடன் மீட்சியைப் பதிவுசெய்தது. இச்சாதகமான வளர்ச்சி, தனியார் வாணிப நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியிலிருந்து தோன்றிய வலுவான உள்நாட்டுக் கேள்வியையும் முக்கிய கைத்தொழில் நாடுகளின் பொருளாதாரம் மீட்சியடைந்தமையைத் தொடர்ந்து அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வியினையும் பிரதிபலிப்பதாக இருந்தது. 1995 இல் சார்புரீதியில் ரூபாவின் அதிஉயர் பெறுமானத்தேய்வும் கைத்தொழில்துறைக்கு உதவியது. எவ்வாறாயினும், 1995 இல் கைத்தொழில்துறை தொடர்ந்தும் இடர்பாடுகளைக் கொண்டிருந்தமைக்கு தொடர்ச்சியான தொழிலாளர் அமைதியின்மை மற்றும் உயர்ந்த கூலிக்கான அதிகரித்த அழுத்தம், உயர்ந்த நிதியிடல் செலவுகள், உள்ளமைப்புக் கட்டுப்பாடுகள் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட பெருமளவு குறைப்பு என்பனவே காரணங்களாகும். வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக பங்குச்சந்தைகள் மந்தமாகக் காணப்பட்ட சூழ்நிலையில் தொழில் முயற்சிகள் வங்கிக்கொடுகடனை அதிகரித்தளவில் நாடின.

## 4.2. உற்பத்தி

முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளல்லாத 350 முயற்சிகளை உள்ளடக்கிய கைத்தொழில் உற்பத்திகளின் ஆண்டு அளவீடு ஒன்றின் அடிப்படையிலும் முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளுக்கான ஏற்றுமதித் தரவுகளின் மதிப்பீடுகளின் அடிப்படையிலும் 1995 இல் கைத்தொழில் வெளியீடு 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நடைமுறை விலைகளில் கைத்தொழில் வெளியீடு 16.1 சதவீதத்தினால் அதிகரித்ததன் மூலம் தொழிற்சாலை கைத்தொழில்களுக்கான 5.3 சதவீதங்கொண்ட உள்ளடக்க விலைச்சுருக்கியைக் காட்டியது.

1995 இல் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சிக்கான தூண்டுவிசை இரு முக்கிய கைத்தொழில் வகைகளான புடவை, அணியும் ஆடைகள், மற்றும் தோல் உற்பத்தி வகை உணவு, குடிபானம், புகையிலை வகை என்பனவற்றிலிருந்தே கிடைத்தன. இவ்விரு வகைகளும் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியில் 87 சதவீதத்திற்கு உதவின.


முன்னைய ஆண்டினைப் போலவே, 1995 இல் கைத்தொழில்துறையின் வளர்ச்சி முழுவதும் தனியார்துறையிலிருந்தே கிடைத்தது. தனியார் துறையின் கைத்தொழில் உற்பத்தி 1994 இன் 11 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 1995 இல் கைத்தொழிலின் மொத்தக் கூட்டிய பெறுமதியில் 91 சதவீதத்திற்கு வகைகூறியது. இயக்க விசை கொண்ட தொழில் முயற்சியாளர் வகுப்பொன்றின் தோற்றத்துடன் அரசுடைமைத் தொழில் முயற்சிகள் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்பட்டமையினால் அரசதுறையின் முக்கியத்துவம் குறைந்துவிட்டமையின் காரணமாக தனியார்துறை கைத்தொழில் நடவடிக்கைகள் முன்னணிக்கு வந்திருந்தன.

### புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்

1995 இல் புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் வெளியீடு உண்மை நியதிகளில் 12.5 சதவீதத்தினால் அதிகரித்து கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியில் 56 சதவீதத்திற்கு பங்களித்தது. இவ்வகை, மொத்தக்

வரைபடம் 4.1

கைத்தொழில் உற்பத்திகளின் உள்ளமைப்பும், வளர்ச்சியும்




கைத்தொழில் உற்பத்தியின் 47 சத வீதத்திற்கு வகை கூறியது. அனுமதிப்பங்கு வரையறைகளில் ஏறத்தாழ 9 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் அதிகரிப்பானது முக்கியமாக அனுமதிப் பங்கற்ற ஆடை ஏற்றுமதிகளிலேயே காணப்பட்டன. அ. ஐ. நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தப் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் 21 சதவீதத்தினால் அதிகரித்தன. அனுமதிப்பங்கின் கீழான அணியும் ஆடைகள் ஏற்றுமதி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் அனுமதிப் பங்கற்ற அணியும் ஆடைகள் ஏற்றுமதி விடயங்கள் 23 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இதேபோன்று அனுமதிப்பங்கின் கீழுள்ள அணியும் பொருட்கள் அல்லாத வகையின் ஏற்றுமதிகள் 19 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அனுமதிப் பங்கின் கீழ் வராத அணியும் பொருட்கள் அல்லாத வகை 81 சதவீதத்தினால் அதிகரித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தினைப் பொறுத்தவரையில் அனுமதிப் பங்கு வரையறைகளின் விகிதம் 7 சதவீதத்தினால் உயர்த்தப்பட்டவேளையில் அனுமதிப் பங்கின் பயன்பாடு 11 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இதேபோன்று 1995 இல் புடவைகள் மற்றும் ஆடைகளின் மொத்த ஏற்றுமதிகள் ரூபா நியதிகளில் 24 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு அனுமதிப்பங்கிலிருந்து சுயாதீனமான அதிஉயர் போட்டித்தன்மையினைக் கொண்ட யப்பானிய, கொறியச் சந்தைகளில் வலுவாகக் காலூன்ற இயலுமாகக் காணப்பட்டமை யானது கவனிக்கத்தக்கதொரு அம்சமாகும். மொத்தமாக அனுமதிப்பங்கற்ற விடயங்களின் பங்கு 1994 இல் 43 சதவீதத்திலிருந்து 1995 இல் 50 சதவீதத்திற்கு அதிகரித்தது.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் முதலீட்டுச்சபை என்பனவற்றின்படி இருநூறு ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்வரும் தொழிற்சாலைகளுடன் 1995 இல் 629 ஆடைத் தொழிற்சாலைகள் தொழிற்பாட்டில் இருந்தன. இத்தொழிற்சாலைகள் 232,000 நேரடித் தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. இருநூறு ஆடைத்தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 160 தொழில் முயற்சிகள் வர்த்தக உற்பத்தியிலீடுபட்டு ஏறத்தாழ 76,903 ஆட்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கின. 1995 இல் இத்தொழில் முயற்சிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 32.9 பில்லியனாக இருந்தன.

1995 சனவரியில் உலக வர்த்தக அமைப்பு நிறுவப்பட்டதைத் தொடர்ந்து பல் நூலிழை உடன்படிக்கையின் கீழ் வந்துள்ள ஏற்கனவேயுள்ள இருபுடை புடவை உடன்படிக்கைகள் அனைத்தும் புடவைகள் மற்றும் ஆடைகள் மீதான உருகுவே சுற்றுவட்ட உடன்படிக்கைக்குள் புகுத்தப்பட்டன. பல்புடை வர்த்தக முறைக்குள் புடவைகள் மற்றும் ஆடைகளை முழுமையாக ஒருங்கிணைப்பதனையும் 2005 ஆம் ஆண்டளவில் புடவை மற்றும் ஆடைகளில் முழுமையான கட்டுப்பாடற்ற வர்த்தகத்தை உருவாக்குவதனையும் நோக்காகக்கொண்டு பத்து ஆண்டுகாலப்பகுதிக்கு அனுமதிப்பங்குகளை

### அட்டவணை 4.1

### கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1991 – 1995
### (1990 நிலையான விலைகளில்)

| | ரூ.ப.இ | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) | 1994 | 1995 (அ) |
| 1. உணவு குடிபானங்கள் புகையிலை | 24,000 | 28,080 | 30,354 | 32,661 | 36,222 | 7.6 | 10.5 |
| 2. புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 32,265 | 38,805 | 45,540 | 48,333 | 55,480 | 6.1 | 14.8 |
| 3. மரமும் மர உற்பத்திகளும் | 710 | 797 | 939 | 1,085 | 1,243 | 15.5 | 14.5 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 2,180 | 2,628 | 3,140 | 3,565 | 3,508 | 13.5 | -1.6 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 21,627 | 19,752 | 23,683 | 25,838 | 27,543 | 9.1 | 6.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 7,850 | 9,451 | 10,349 | 11,643 | 12,516 | 12.5 | 7.5 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,388 | 1,555 | 1,412 | 1,879 | 1,650 | 33.1 | -12.2 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 4,702 | 5,314 | 5,203 | 5,931 | 6,139 | 14.0 | 3.5 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 361 | 388 | 466 | 564 | 620 | 21.1 | 10.0 |
| மொத்தம் | 95,083 | 106,770 | 121,086 | 131,499 | 144,921 | 8.6 | 10.2 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

### அட்டவணை 4.2

### தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 1991 – 1995
### (1990 நிலையான விலைகளில்)

(1990 நிலையான விலைகளில்)

| | ரூ. ப. இ. | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995(அ) | 1994 | 1995 (அ) |
| 1. உணவு குடிபானங்கள் புகையிலை | 111 | 120 | 129 | 140 | 155 | 8.0 | 11.0 |
| 2. புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 116 | 144 | 168 | 179 | 202 | 6.4 | 12.8 |
| 3. மரமும் மர உற்பத்திகளும் | 101 | 106 | 123 | 149 | 170 | 21.1 | 14.1 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 121 | 184 | 226 | 263 | 266 | 16.3 | 1.0 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 97 | 121 | 132 | 159 | 196 | 20.0 | 23.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 106 | 137 | 159 | 212 | 228 | 33.7 | 7.5 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 145 | 167 | 225 | 266 | 305 | 18.0 | 15.0 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 116 | 126 | 124 | 141 | 147 | 13.8 | 3.9 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 122 | 127 | 152 | 184 | 203 | 21.0 | 10.0 |
| மொத்தம் | 114 | 137 | 155 | 172 | 192 | 10.9 | 12.1 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

விரிவாக்குவதற்கான வரைச்சட்டமொன்றினை புடவைகள் மற்றும் ஆடைகள் மீதான உருகுவே சுற்றுவட்ட உடன்படிக்கை உருவாக்கியுள்ளது. எனவே எதிர்காலத்தில் அனுமதிப்பங்கு முழுமையாக ஒழிக்கப்படுவதனைத் தொடர்ந்து கடுமையான போட்டியினை எதிர்கொள்வதற்கு இலங்கை தயாராக இருக்கவேண்டும் என்பது மிக முக்கியமானதாகும்.

உறுதியான ஏற்றுமதிச் சந்தையைக் கொண்டுள்ள ஏற்றுமதிசார்ந்த புடவை தயாரிப்புக் கைத்தொழில் 1995 இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வாண்டுக்காலத்தில் ஏற்றுமதி சார்ந்த புடவை தயாரிப்புக் கைத்தொழில்கள் பல குறிப்பாக ஐரோப்பிய பொருளாதார சமூகம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து நூல் மற்றும் நூலிழை, அழுத்தப்பட்ட புடவை என்பவற்றுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியைச் சமாளிப்பதற்காக தமது உற்பத்தி இயலளவை விரிவாக்கிக் கொண்டதுடன் அவற்றின் தொழிற்சாலைகளையும் நவீனப்படுத்திக்கொண்டன.

அதேவேளை, உள்ளூர்ச்சந்தைக்கு பொருட்களை வழங்கிய சில புடவைத் தயாரிப்பாளர்கள் சந்தைப் பிரச்சினைகளால் பின்னடைவைக் கொண்டிருந்தனர். இப்பிரச்சினைக்கு முதலீட்டுச் சபையின் ஆடைத் தொழிற்சாலை களிலிருந்து உள்ளூர் சந்தைகளுக்கு புடவைகள் இரகசியமாகச் சென்று விடுவதே முக்கிய

அட்டவணை 4.3

**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1991 - 1995**
**(நடைமுறை விலைகள்)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 30,003 | 34,157 | 39,709 | 45,054 | 54,927 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 33,854 | 53,929 | 70,057 | 78,211 | 89,944 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் | 802 | 1,005 | 1,230 | 1,601 | 1,929 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 2,214 | 2,586 | 3,438 | 4,066 | 4,595 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 20,140 | 23,817 | 28,876 | 34,017 | 38,321 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 8,181 | 10,582 | 12,351 | 14,580 | 16,740 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,264 | 1,424 | 1,497 | 1,909 | 1,736 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | 5,093 | 5,948 | 5,915 | 7,122 | 7,977 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,373 | 2,658 | 3,402 | 4,083 | 5,271 |
| மொத்தம் | 103,924 | 136,106 | 166,475 | 190,643 | 221,440 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

காரணமாகும். கடந்த காலத்தில் இத்துறையும் மிகுந்த பாதுகாப்பின் கீழேயே தொழிற்பட்டதுடன் அண்மைய தீர்வைக் குறைப்புக்களும் அவர்களது போட்டித் தன்மைப் பிரச்சினைகளை அதிகரித்திருக்கக்கூடும். பாரிய தொழிற்சாலைகளில் காணப்பட்ட தொழிலாளர்கள் தகராறுகளும் கைத்தொழிலின் மந்தமான தன்மைக்கு பொறுப்பாக இருந்தன. தற்போதைய பின்னணியில் உள்ளூர் புடவைக் கைத்தொழிலுக்கு நவீன தொழில்நுட்பத்தில் முதலீடும், செலவைக் குறைக்கத்தக்க மிகுந்த இயக்க ஆற்றலும் போட்டித் தன்மையும் அவசிய தேவையாக வுள்ளது. அதேவேளை துறைமுகங்களில் உத்தேச கப்பற்படுத்தலுக்கு முன்னான பரிசோதனைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதன் மூலமாக கண்காணிப்பினை அதிகரிப்பது உள்ளூர் புடவைக் கைத்தொழில்களுக்கு உதவும் வேளையில் அரசாங்கத்திற்கான சுங்க வருவாய்களையும் அதிகரிக்கும்.

1995 இல் தோல் உற்பத்திப் பொருட்களும் 17 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தன. எனினும் காலணித் துணைத்துறை 7 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

### உணவு, குடிபானங்கள், புகையிலை

அதிகரித்த உள்நாட்டு நுகர்வோர் கேள்வியைக் கருத்திற் கொண்டு, உணவு, குடிபானம், புகையிலைத்துணைத்துறை ஆய்வுக்குரிய ஆண்டில் தொடர்ந்தும் விரிவடைந்தது. இக்கைத்தொழில்துறை உண்மை நியதிகளில் 10.5 சதவீதத்தினால் விரிவடைந்ததுடன் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியில் 31 சதவீதத்திற்கும் உதவியது. பதனிடப்பட்ட புகையிலை, இலைப்புகையிலை, சி.ரி.சி. தேயிலை, மற்றும் உறைகளிலடைக்கப்பட்ட தேயிலை போன்ற குடிபானங்கள் என்பனவற்றில் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. மா, பாற்பண்ணை உற்பத்திகள், பிஸ்கட்டுக்கள், இறைச்சி உற்பத்திப் பொருட்கள், குடிபானங்கள், என்பனவற்றில் அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பிரதிபலிக்கப்பட்டன. கோதுமை மா உதவுதொகையின் முக்கிய காரணமாக கோதுமை மாவை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியானது மேம்பட்ட இச்செயலாற்றத்திற்குப் பங்களித்ததெனினும் வேறோரிடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது போன்று வேளாண்மைத்துறை இதன் மூலம் இழப்புக்களைக் கொண்டிருந்தது. தொழிலாளர் பிணக்குகளின் காரணமாக முன்னைய ஆண்டில் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்த புகையிலை உற்பத்திப் பொருட்களின் வெளியீடு 1995 இல் மீட்சியடைந்தது. சிகரட் தயாரிப்புக் கைத்தொழில், குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் களவாகக் கடத்தி வரப்பட்ட சிகரட்டுக்களுடன் போட்டியிட வேண்டியிருந்தது. தொழிலாளர் அமைதியின்மை காரணமாக முன்னைய ஆண்டில் வீழ்ச்சியைப்பதிவுசெய்த கோழித்தீன் உற்பத்தி மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன்

இவ்வாண்டில் தடங்கலற்ற உற்பத்தியும் காணப்பட்டது. 1995 நவெம்பரில் பியர்மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டதனைத் தொடர்ந்து 1995 இறுதிப்பகுதியில் உள்நாட்டுப் பியர் கைத்தொழில் அதன் உற்பத்தியின் இயலளவு மட்டத்தினை அடைந்தது.

## இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்

1995 இல் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் வகைகளின் வெளியீடு முன்னைய ஆண்டின் 11 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பேணல் நோக்கங்களுக்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தூய்மி தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமையே காரணமாகும். ரயர்கள், ரியூப்புக்கள், இறப்பர் கையுறைகள், பொலித்தீன் உறைகள், இறப்பர் உறைகள், நுரை இறப்பர் மெத்தைகள், பி.வி.சி. தொங்குபைகள், பி.வி.சி. மழை அங்கிகள் போன்ற இறப்பர் உற்பத்திப் பொருட்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததுடன், முக்கிய இறக்குமதி நாடுகளிலிருந்து குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்பனவற்றிலிருந்தான மிக அதிகரித்த கேள்வியினால் அதிகூடிய வளர்ச்சி கண்டது. சவர்க்காரம், மற்றும் குளியலறைப் பொருட்கள், மருந்தாக்கற்பொருட்கள், வேளாண்மை – இரசாயனங்கள் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் வெளியீடு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களைவிடக் குறைந்தவிலை களினாலும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் மேம்பட்ட தரத்தினாலும் வலுவான உள்ளூர் கேள்விகளினால் தூண்டப்பட்டமையே காரணமாகும்.

## ஏனைய கைத்தொழில் உற்பத்தி

தொலைமற் உற்பத்திகள், வெண்களிமண் உருவச்சிலைகள், கருங்கற்பாளங்கள் என்பனவற்றிற்கான அதிகரித்த ஏற்றுமதிக் கேள்வியானது உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திப்பொருட்கள் வகை 1995 இல் 7.5 சதவீத வளர்ச்சியை எய்த உதவியது. சில நிறுவனங்களில் தொழிலாளர் அமைதியின்மையின் மத்தியிலும், வைரங்களை வெட்டி பட்டை தீட்டும் கைத்தொழிலும் 1995 இல் 4 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பெற்றது. கண்ணாடி மற்றும் கண்ணாடி உற்பத்திப் பொருட்கள், கல்நார்த்தகடுகள் தயாரிப்பு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டது. இச்சாதகமான செயலாற்றத்திற்கு கட்டடவாக்க கைத்தொழில் களிலிருந்து தோன்றிய இப்பொருட்களுக்கான வளர்ந்து செல்லும் உள்நாட்டுக் கேள்வியே பெருமளவிற்குக் காரணமாகும். அதிகரித்த கேள்வி காணப்பட்டபோதும் சீமெந்து உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு வரையறுக்கப்பட்ட றுகுணு சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கான இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் கிடைப்பனவு தாமதமாகியமையே காரணமாகும். தொழிலாளர் அமைதியின்மை காரணமாக 1994 இல் வீழ்ச்சியடைந்த மட்பாண்ட உற்பத்திப் பொருட்களின் வெளியீடு 1995 இல் சிறிதளவு மீட்சியடைந்தது.

தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்களின் வகை, வெளியீட்டில் 1.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ் வீழ்ச்சிக்குத் தேசிய தாள் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். எனினும் இவ்வாண்டில் தனியார்துறையின் அச்சிடல், தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள், சுட்டுத் துண்டுகள் என்பனவற்றின் தயாரிப்புக்கள் 14 சதவீதத்தினால் அதிகரித்தன. இதற்கு வளர்ந்து செல்லும் தயாரிப்பு மற்றும் பணிகள் துறைகளிலிருந்து உருவான அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியே முக்கிய காரணமாகும்.

உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் வெளியீடு 3.5 சதவீதம்கொண்ட சிறிதளவு மேம்பாட்டைக் காட்டியது. இந்த வகையினுள் உருவமைக்கப்பட்ட உலோகம், மின்கலங்கள், மின் குமிழ்கள், மின் கம்பிகள் வேளாண்மைப் பொறிகள் என்பனவற்றின் தயாரிப்பில் உயர்ந்த வளர்ச்சி வீதங்கள் பதிவுசெய்யப்பட்டன. முன்னைய ஆண்டில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவுசெய்த பேருந்துகள் மற்றும் சரக்கு வண்டிகள் என்பனவற்றின் உடல் உரு அமைப்பில் ஈடுபட்டிருந்த கைத்தொழில்களின் வெளியீடு, அதிகரித்தஉள்ளூர்க் கேள்வியின் காரணமாக 1995 இல் மேலும் விரிவடைந்தது.

ஏனைய கைத்தொழில்களுக்கிடையே கயிற்றுத்தும்பு உற்பத்திப் பொருட்கள், மீன்பிடிக் கருவிகள், நைலோன் வலைகள் என்பனவற்றில் மிதமான வெளியீட்டு வளர்ச்சிவீதங்கள் பதிவு செய்யப்பட்டன. சிறுவர்களுக்கான மென் விளையாட்டுப் பொருட் கைத்தொழில் மேம்பாடடைந் தமைக்கு உயர்வான ஏற்றுமதிக் கேள்வியே காரணமாகும்.

## அட்டவணை 4.4

## அனுமதிப்பங்கின் கிடைப்பனவும் அவற்றின் பயன்பாடும் 1994 — 1995

| உற்பத்தியின் விபரம் | அலகு | கிடைக்கத்தக்க அனுமதிப் பங்கு 1994 (அ) | கிடைக்கத்தக்க அனுமதிப் பங்கு 1995 (ஆ) | பயன்பாடு 1994 (அ) | பயன்பாடு 1995 (ஆ) | பயன்பாட்டு வீதங்கள் % 1994 (அ) | பயன்பாட்டு வீதங்கள் % 1995 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஐ.சு.நா. அனுமதிப்பங்கு** | | | | | | | |
| விளையாட்டு உடைகள் போன்றன | டசின் | 239,301 | 304,360 | 201,831 | 280,134 | 84.3 | 92.0 |
| சீத்தைகளும் ஆடவர்கம்பளி உடைகளும் | சமீச | 3,600,000 | 4,120,099 | 3,356,568 | 3,603,355 | 93.2 | 87.5 |
| கையுறைகள் | ட.சோ | 5,878,186 | 5,327,848 | 5,878,186 | 5,120,332 | 100.0 | 96.1 |
| நீண்ட முழு உடைகள் | டசின் | 23,700 | 2,605 | 5 | 0 | 0.0 | 0.0 |
| ஏனைய தடித்த மேலங்கிகள் | டசின் | 729,133 | 615,833 | 729,133 | 527,869 | 100.0 | 85.7 |
| தடித்த மேலங்கிகள் | டசின் | 272,081 | 283,781 | 272,081 | 197,320 | 100.0 | 69.5 |
| ஆடைகள் | டசின் | 499,328 | 572,566 | 499,328 | 589,817 | 100.0 | 103.0 |
| பின்னப்பட்ட ஆண் பெண் மேலங்கிகள் | டசின் | 1,244,751 | 1,388,284 | 1,099,519 | 1,303,179 | 88.3 | 93.9 |
| பின்னப்படாத ஆண் பெண் மேலங்கிகள் | டசின் | 1,232,439 | 1,253,654 | 1,170,802 | 894,974 | 95.0 | 71.4 |
| ஆண்களின் மேலங்கிகள் | டசின் | 1,136,441 | 1,346,490 | 1,136,441 | 1,185,016 | 100.0 | 88.0 |
| பெண்களின் மேலங்கிகள் | டசின் | 1,769,513 | 1,930,467 | 1,753,318 | 1,289,444 | 99.1 | 66.8 |
| பாவாடைகள் | டசின் | 442,964 | 584,835 | 290,336 | 730,985 | 65.5 | 125.0 |
| குளிராடைகள் | டசின் | 96,475 | 140,563 | 77,111 | 77,883 | 79.9 | 55.4 |
| நீண்ட காற்சட்டைகள், தளர் ஆடைகள், கட்டைக் காற்சட்டைகள் | டசின் | 1,506,969 | 1,557,838 | 1,506,969 | 1,491,071 | 100.0 | 95.7 |
| பெண்களின் நீண்ட சட்டைகள் | டசின் | 56,875 | 116,046 | 56,875 | 65,314 | 100.0 | 56.3 |
| இரவு உடைகளும் பிஜாமாக்களும் | டசின் | 321,783 | 373,596 | 310,753 | 324,940 | 96.6 | 87.0 |
| உள்ளங்கிகள் | டசின் | 1,148,395 | 1,246,213 | 1,145,719 | 1,215,823 | 99.8 | 97.6 |
| மேலுறைகள் | கி.கி. | 866,644 | 1,343,928 | 669,973 | 1,144,057 | 77.3 | 85.1 |
| தலையணை உறைகள் | எண் | 88,398 | 126,049 | 88,398 | 65,453 | 100.0 | 51.9 |
| மென்மயிர் மற்றும் துணிச்சடைத் துவாய்கள் | எண் | 555,966 | 349,552 | 279,723 | 362,316 | 50.3 | 103.7 |
| சாப்பாட்டு மேசைத் துவாய்கள் | கி.கி. | 635,404 | 624,518 | 180,642 | 233,184 | 28.4 | 37.3 |
| கடைத் துவாய்கள் | கி.கி. | 614,081 | 487,779 | 462,115 | 336,790 | 75.3 | 69.0 |
| தடித்த மேலங்கிகளும் முழுஆடைகளும் | டசின் | 6,221 | 7,860 | 0 | 513 | 0.0 | 6.5 |
| தடித்த மேலங்கிகள் | டசின் | 15,750 | 15,933 | 15,135 | 7,093 | 96.1 | 44.5 |
| ஆண் பெண் மேலங்கிகள் பின்னப்படாதவை | டசின் | 8,887 | 11,735 | 0 | 4,325 | 0.0 | 36.9 |
| துணி நூற்கப்பட்ட, நெய்யப்பட்டவை | சமீச | 4,147,017 | 5,310,564 | 2,602,347 | 1,610,683 | 62.8 | 30.3 |
| தடித்த மேலங்கிகள் | டசின் | 389,586 | 383,861 | 389,586 | 315,834 | 100.0 | 82.3 |
| பெண் ஆண் மேலங்கிகள் | டசின் | 668,827 | 847,546 | 505,416 | 692,407 | 75.6 | 81.7 |
| பின்னப்படாத ஆணி, பெண் மேலங்கிகள் | டசின் | 1,141,088 | 1,207,271 | 624,162 | 394,470 | 54.7 | 32.7 |
| நீண்ட முழு ஆடைகள் | எண் | 17,381 | 41,406 | 4,151 | 3,758 | 23.9 | 17.6 |
| குளிராடைகள் | டசின் | 25,943 | 87,331 | 7,219 | 953 | 27.8 | 1.1 |
| நீண்ட காற்சட்டைகள், தளர் ஆடைகள், கட்டைக் காற்சட்டைகள் | டசின் | 669,747 | 991,211 | 637,802 | 671,771 | 95.2 | 67.8 |
| ஆண் பெண் மேற்சட்டைகள் (பட்டுடன் கலந்து நெய்யப்படாதவை) | டசின் | 230,884 | 157,671 | 230,884 | 146,471 | 100.0 | 92.9 |
| **ஐ.பொ.சமுக அனுமதிப்பங்கு** | | | | | | | |
| ஆண், பெண் நீளக்காட்சட்டைகள் ஆண்களின் கட்டைக் காற்சட்டைகள் குறுங்காற்சட்டைகள் | எண் | 5,882,172 | 6,732,021 | 5,201,255 | 6,801,927 | 88.42 | 101.04 |
| பெண்கள், சிறுமியர் நெய்யப்பட்ட மற்றும் பின்னப்பட்ட மேலங்கிகள் | எண் | 11,355,160 | 11,721,360 | 11,161,138 | 11,800,567 | 98.29 | 100.68 |
| ஆண், சிறுவர் நெய்யப்பட்ட மேலங்கிகள் | எண் | 8,151,072 | 8,242,000 | 7,694,681 | 7,669,036 | 94.40 | 93.05 |
| தலைக்கவிகையுடனான நீண்ட குளிர் ஆடைகள் தலைக் கவிகையுடனான நுருவ ஆடைகள் | எண் | 6,789,610 | 7,675,983 | 2,859,067 | 3,602,337 | 42.11 | 46.93 |
| **கனடாவின் அனுமதிப் பங்கு** | | | | | | | |
| தடித்த மேலங்கிகள், வெதுவெதுப்பான மேலங்கி, மழைக்கான ஆடை | எண் | 888,061 | 894,492 | 752,950 | 757,412 | 84.79 | 84.68 |
| இதில் தடித்த மேலங்கிகள் | எண் | 111,618 | 113,836 | 56,448 | 47,982 | 50.57 | 42.15 |
| குளிர்கால உடுப்புக்கள் | எண் | 219,883 | 210,159 | 219,883 | 207,099 | 100.00 | 98.54 |
| ஆண் பெண் சாதாரண, அதிசிறப்பு ஆடைகள் | எண் | 768,395 | 800,729 | 344,443 | 483,536 | 44.83 | 60.39 |
| அதிசிறந்த முழு ஆடைகள் | எண் | 23,532 | 25,297 | 0 | 0 | 0.00 | 0.00 |
| நீண்ட காற்சட்டைகள், முழு மற்றும் கட்டைக் காற்சட்டைகள் | எண் | 794,081 | 853,638 | 525,076 | 669,101 | 66.12 | 78.38 |
| தைக்கப்பட்ட கொலர் மேலங்கிகள் ஆ.சி.கு. | எண் | 708,598 | 761,742 | 576,047 | 504,825 | 81.29 | 66.27 |
| விளையாட்டு உடைகள், மேலங்கிகள் | எண் | 1,451,648 | 911,808 | 994,279 | 447,930 | 68.49 | 49.13 |
| நெய்யப்பட்ட பின்னப்பட்ட ஆண் பெண் மேலங்கிகள், | எண் | 664,751 | 644,100 | 664,759 | 669,984 | 100.0 | 104.02 |
| உள்ளங்கிகள் | எண் | 1,013,543 | 1,130,232 | 845,182 | 344,893 | 83.39 | 30.5 |
| இரவாடைகள், குளியலறை அங்கிகள் | எண் | 588,300 | 632,423 | 345,156 | 106,417 | 58.67 | 16.83 |
| குளிர் ஆடைகள் | எண் | 186,686 | 112,867 | 18,744 | 42,377 | 10.04 | 37.55 |
| நீச்சல் உடைகள் | எண் | 503,366 | 632,423 | 99,199 | 159,041 | 19.71 | 25.15 |
| குழந்தைகளின் ஆடைகள் | எண் | 294,150 | 316,211 | 98,107 | 212,584 | 33.35 | 67.23 |
| படுக்கை விரிப்பு | எண் | 543,008 | 658,374 | 34,052 | 179,217 | 6.27 | 27.22 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் உற்பத்திப்போக்கு ஏற்றுமதிச் செயலாற்றத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது சாதகமான வெளிநாட்டுக் கேள்விகளுக்கு மேலதிகமாக முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் கடந்த சில ஆண்டுகளில் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கான அதிகரித்த முதலீட்டு ஒப்புதல்கள் மற்றும் ஏற்கனவே உள்ள கைத்தொழில்களின் இயலளவின் விரிவாக்கம் ஆகியன இத்துறையின் மேம்பட்ட செயலாற்றத்திற்கு உதவின. 1995 இல் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் வெளியீடு உண்மை நியதிகளில் 1994 இன் மட்டத்தினைவிட 16 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டம் உட்பட முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1994 இன் ரூ. 88 பில்லியனிலிருந்து (சிஎஉ 12,440 இலட்சம்) 1995 இல் ரூ. 113 பில்லியனுக்கு (சிஎஉ 14,530 இலட்சம்) 28 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. முதலீட்டுச் சபையின் கீழ் உள்ள அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த கைத்தொழில் துணைத் துறைகளாக உணவு, குடிபானமும் புகையிலையும் (23 சதவீதம்), புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் (13 சதவீதம்) மர, மர உற்பத்திப் பொருட்கள் (65 சதவீதம்) இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (40 சதவீதம்) உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் (24 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் (85 சதவீதம்) மற்றும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திப் பொருட்கள் (27 சதவீதம்) என்பன விளங்கின.

1995 இல், உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு, 1994 இன் 5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 85 சதவீதத்திற்கு வகைகூறும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தூய்மி 1995 இன் முற்பகுதியில் பேணல் நோக்கங்களுக்காக மூடப்பட்டமையின் விளைவாக உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே (8 சதவீதம்) இதற்கான முக்கிய காரணமாகும். பெற்றோலியம் நீக்கப்படுமிடத்தும் அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1995 இல் வெளியீட்டில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த அரசதுறைத் தொழில் முயற்சிகளாக, வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு (78 சதவீதம்), அரச மரக் கூட்டுத்தாபனம் (20 சதவீதம்), வரையறுக்கப்பட்ட இலங்கை பொசுபேற்று (12 சதவீதம்) வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் தயாரிப்பு கூட்டுநிலையம் (10 சதவீதம்), வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழில் (1 சதவீதம்) என்பன விளங்கின.

ஆண்டில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள், புதிய பொறிகளும் பம்பிகளும் பயன்படுத்தப்பட்டமை என்பனவே வரையறுக்கப்பட்ட இலங்கை உப்பு நிறுவனத்தின் அதிகரித்த வெளியீட்டிற்கு உதவிய முக்கிய காரணிகளாகும். பிரித்தெடுக்கப்பட்ட லேட்டெக்சிற்கான அதிகரித்த கேள்வியைத் தொடர்ந்து ஏற்பட்ட உயர்ந்தமட்ட உற்பத்தியே வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி அதிகரிப்புக்கான முக்கிய காரணமாக அமைந்தது.

அட்டவணை 4.5

அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண் 1991 – 1995

| வகை | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 18.3 | 13.4 | 8.1 | 9.3 | 10.5 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 66.6 | 27.5 | 10.3 | – | – |
| 3. மரமும், மர உற்பத்திகளும் (தளபாடங்கள் உட்பட) | 12.3 | 20.3 | 25.4 | 22.0 | 26.7 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 137.4 | 156.6 | 174.1 | 187.8 | 169.2 |
| 5. இரசாயன, பெற்றோலிய, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 111.9 | 86.9 | 121.8 | 126.3 | 115.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 131.1 | 91.8 | 129.4 | 134.2 | 123.1 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 143.5 | 143.4 | 120.0 | 5.5 | 5.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 111.5 | 125.7 | 92.4 | 130.8 | 95.0 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 17.4 | – | – | – | – |
| எல்லா வகைகளும் | 91.6 | 73.3 | 87.9 | 83.8 | 76.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்தவை | 67.6 | 52.7 | 41.7 | 27.7 | 24.1 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டில் வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளாக வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் (27 சதவீதம்), வரையறுக்கப்பட்ட இலங்கை கனிப்பொருள் மணல் (19 சதவீதம்) வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (8 சதவீதம்) வரையறுக்கப்பட்ட தேசியதாள் கூட்டுநிலையம் (10 சதவீதம்) என்பன விளங்கின.


மூலவளங்களின் வழங்கலில் காணப்பட்ட பற்றாக்குறை, தொழிலாளர் பிணக்குகள், பேணல் நோக்கங்களுக்காக தொழிற்சாலை மூடப்பட்டமை என்பனவற்றின் விளைவாக வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் வீழ்ச்சி ஏற்பட்டது. மூலப் பொருட்களுக்கான சுரங்கமகழ்வில் காணப்பட்ட குறைந்த மட்டத்தின் காரணமாக மூலப்பொருட்களின் வழங்கல் குறைவடைந்தமையானது வரையறுக்கப்பட்ட இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனத்தின் வெளியீடு வீழ்ச்சியடையப் பொறுப்பாகவிருந்தது. வரையறுக்கப்பட்ட தேசிய தாள் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு வீழ்ச்சியடைந்தமைக்கு மூலப்பொருட்களின் குறைந்த நிரம்பலும் வாழைச்சேனை தொழிற்சாலையில் மின்வலு வழங்கல் தடைப்பட்டமையுமே பெருமளவு காரணமாகும்.

அரசதுறைத் தொழில் முயற்சிகளின் துறைவாரியான பகுப்பாய்வின் நியதிகளின்படி மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை வகைகள் வெளியீட்டில் முறையே 21 சதவீத, 13 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த கைத்தொழில் வகைகளாக அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் (27 சதவீதம்) தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் (10 சதவீதம்) இரசாயனங்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (8 சதவீதம்) உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (2 சதவீதம்) என்பன விளங்கின.

## 4.3. கூட்டிய பெறுமதி

பெயரளவு நியதிகளில், கைத்தொழிலில் கூட்டிய பெறுமதி முன்னைய ஆண்டின் 15 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1995 இல் 17 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தொழிற்சாலை நிலைப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். உண்மை நியதிகளில் கூட்டிய பெறுமதியின் வளர்ச்சி 10 சதவீதமாக இருந்தது.

1995 இல் தயாரிப்புக் கைத்தொழிலின் மொத்தக் கூட்டிய பெறுமதி ரூ. 82 பில்லியனாகும். 1995 இல் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியின்




சதவீதமாக கூட்டிய பெறுமதி விகிதம் முன்னைய ஆண்டின் மட்டத்தினை ஒத்ததாக 37 சதவீதமாகக் காணப்பட்டது. 50 சதவீதத்திற்கு மேலான கூட்டிய பெறுமதி விகிதத்தினைக் கொண்ட கைத்தொழில் வகைகளாக மர, மர உற்பத்திப் பொருட்கள் (67 சதவீதம்) உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் (65 சதவீதம்) உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் (61 சதவீதம்) தாளும் தாள் உற்பத்திகளுக்கும் (57 சதவீதம்) மற்றும் உணவு குடிபானம் புகையிலை (54 சதவீதம்) என்பன காணப்பட்டன. 50 சதவீதத்திற்குக் குறைவான கூட்டிய பெறுமதி வீதத்தினைக்கொண்ட கைத்தொழில் வகைகளாக வேறு எங்கும் குறிப்பிடப்படாத பொருட்கள் (42 சதவீதம்) புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் (26 சதவீதம்) அடிப்படை உலோக உற்பத்திப்பொருட்கள் (17 சதவீதம்) மற்றும் இரசாயனங்கள் பெற்றோலியம் நிலக்கரி இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் என்பன காணப்பட்டன (16 சதவீதம்).

## 4.4. கொடுகடனும் ஏனைய உள்ளீடுகளும்

### கொடுகடன்

தேசிய அபிவிருத்தி வங்கியினாலும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றினால் உதவிக்

கூட்டு நிதியிடல் மூலமாகவும் வலுப்படுத்தப்பட்ட சிறிய, நடுத்தர கைத்தொழில் கொடுகடன் திட்டத்தின்கீழ் கைத்தொழில்துறை தொடர்ந்தும் நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன்களைப் பெறுகிறது. 1995 இல், கைத்தொழில்கள்,நிதி உதவிகளைப் பெற்ற மிகமுக்கிய நிதியிடல் நிகழ்ச்சித் திட்டமாக இது விளங்கியது. மேலும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் ஆகியனவும் கைத்தொழில் முயற்சிகளுக்கு கடன்கள் மற்றும் பங்குடைமைப் பங்கேற்பு ஆகியவடிவங்களில் நேரடி நிதி வசதிகளை வழங்கின.

இவ்வாண்டில் தேசிய அபிவிருத்தி வங்கி நேரடி நிதி உதவிக்காக, 1994 இன் ரூ. 54,170 இலட்சம் செலவுடனான 352 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 65,190 இலட்சம் செலவினைக் கொண்ட 431 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. தேசிய அபிவிருத்தி வங்கி ரூ. 4,770 இலட்சம் பெறுமதிகொண்ட பங்குடைமையினை வழங்கியதன் மூலம் 10 செயற்றிட்டங்களில் பங்கேற்றது. இக்கொடுகடன் வசதிகளின் முக்கிய பங்கினைப்பெற்ற கைத்தொழில் வகைகளாக உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திப் பொருட்கள், இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றம் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின.

கைத்தொழில் கடன்கள், பங்குடைமை பங்கேற்பு என்பன மூலமாக இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கைத்தொழில் துறைக்கான கடன் வழங்கல் 1994 இல் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்ததெனினும் 1995 இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் 1994 இல் ரூ. 25,010 இலட்சம் செலவினைக் கொண்ட 311 செயற்றிட்டங்களுக்கு வழங்கிய ஒப்புதலுடன் ஒப்பிடுகையில் 1995 இல் ரூபா 34,240 இலட்சம் கொடுகடன் செலவினைக் கொண்ட 480 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இவ்வசதிகளில் பெரும்பங்கினைப் பெற்ற கைத்தொழில் வகைகளாக உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை, இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின.

1995 இல் வர்த்தக வங்கிகளும் தொடர்ந்து நிதியியல் வசதிகளை வழங்கின. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள் 1994 இறுதியின் ரூ. 19.5 பில்லியனிலிருந்து 1995 செத்தெம்பர் இறுதியில்

அட்டவணை 4.6

**கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி 1991 – 1995**
**(நடைமுறை விலைகள்)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 15,070 | 18,668 | 21,704 | 24,373 | 29,935 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 8,542 | 14,630 | 18,994 | 20,660 | 23,385 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் | 571 | 677 | 831 | 1,081 | 1,292 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 1,167 | 1,397 | 1,912 | 2,301 | 2,600 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 3,199 | 3,989 | 4,723 | 5,758 | 6,515 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 4,905 | 5,918 | 7,163 | 9,272 | 10,546 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 248 | 263 | 279 | 356 | 324 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | 3,247 | 3,629 | 3,608 | 4,344 | 4,865 |
| 9. உற்பத்திகள் (வே. எ.கு.) | 1,092 | 1,196 | 1,532 | 1,838 | 2,373 |
| மொத்தம் | 38,041 | 50,367 | 60,746 | 69,983 | 81,836 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 4.7

## தேசிய அபிவிருத்தி வங்கியினாலும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினாலும் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதியியல் வசதிகள் - 1995

| வகைகள் | தே.அ.வ | | | | | | | | இ.அ.நி.கூ | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீள் நிதியிடலுக்கான ஒப்புதல்கள் சி. ந. கை. செயல் திட்டம் IV | | நேரடி நிதியியல் உதவி | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட கடன் | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | முழு மொத்தம் | |
| | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 254 | 164 | 43 | 1,025 | - | - | 297 | 1,189 | 134 | 1,127 | - | - | 134 | 1,127 | 431 | 2,316 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 97 | 72 | 54 | 510 | 3 | 86 | 154 | 668 | 83 | 398 | 4 | 35 | 87 | 433 | 241 | 1,101 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் | 72 | 42 | 7 | 79 | - | - | 79 | 121 | 38 | 98 | - | - | 38 | 98 | 117 | 219 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 66 | 76 | 11 | 59 | - | - | 77 | 135 | 31 | 182 | - | - | 31 | 182 | 108 | 317 |
| 5. இரசாயனம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 63 | 94 | 32 | 560 | - | - | 95 | 654 | 78 | 790 | 1 | 5 | 79 | 795 | 174 | 1,449 |
| 6. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் | - | – | 40 | 391 | - | - | 40 | 391 | 26 | 155 | 2 | 56 | 26 | 211 | 68 | 602 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 96 | 91 | - | - | - | - | 96 | 91 | 8 | 28 | 1 | 15 | 8 | 28 | 104 | 119 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 465 | 259 | 71 | 813 | 3 | 112 | 539 | 1,184 | 74 | 535 | - | - | 75 | 550 | 164 | 1,734 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 730 | 637 | 173 | 3,082 | 4 | 279 | 907 | 3,998 | - | - | - | - | - | - | 907 | 3,998 |
| மொத்தம் | 1,843 | 1,435 | 431 | 6,519 | 10 | 477 | 2,284 | 8,431 | 472 | 3,313 | 8 | 111 | 480 | 3,424 | 2,764 | 11,855 |

மூலங்கள் : தேசிய அபிவிருத்தி வங்கி,
இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

அட்டவணை 4.8

## கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் பெறுமதி 1991 - 1995

| வகைகள் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு குடிபானங்கள் புகையிலை | 13,432 | 14,768 | 17,869 | 17,978 | 20,872 |
| 2. புடவைகள் அணியும் ஆடைகள் தோல்உற்பத்திகள் | 23,280 | 33,223 | 43,435 | 53,640 | 60,498 |
| 3. மரமும் மர உற்பத்திகளும் | 199 | 258 | 320 | 408 | 522 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 671 | 827 | 1,100 | 1,196 | 1,351 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 16,740 | 17,589 | 23,678 | 27,579 | 30,618 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 1,558 | 2,194 | 2,841 | 2,684 | 3,081 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 890 | 969 | 1,012 | 1,305 | 1,187 |
| 8. உருவைமக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 1,642 | 1,903 | 1,893 | 2,279 | 2,544 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 902 | 983 | 1,327 | 1,510 | 1,950 |
| மொத்தம் | 59,314 | 72,714 | 93,475 | 108,579 | 122,623 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

25 சதவீதத்தினால் ரூ. 24.5 பில்லியனுக்கு அதிகரித்தன. 1995 இன் முதல் மூன்று காலாண்டுகளின்போது வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கைத்தொழில் கொடுகடன்களின் வளர்ச்சிவீதம் 6 சதவீதமாக இருந்தது.

### மூலப் பொருட்கள்

தயாரிப்புத் துறையில் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் மொத்தச் செலவு பெயரளவு நியதிகளில் 1994 இன் ரூ. 109 பில்லியனிலிருந்து 1995 இல் ரூ. 123 பில்லியனுக்கு 13 சதவீதத்தினால் உயர்வடைந்தது. பெருமளவு செலவு அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில் வகைகளாக மர, மர உற்பத்திப் பொருட்கள் மற்றும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின. கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியில் மூலப்பொருட்களின் கூறு உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகையில் 18 சதவீதத்திலிருந்து இரசாயனம் பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகைகளில் 80 சதவீதம் வரையில் வேறுபடுகின்றது. புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் துறையில் மூலப்பொருட்களின் கூறு 67 சதவீதமாகும். 1995 இல் மூலப் பொருட்களின் செலவு கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் 55 சதவீதமாக இருந்தது. 1995 இல் தனியார் துறைக் கைத்தொழில்களின் மூலப்பொருட்களினது செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் தயாரிக்கப்பட்ட இறப்பர் உற்பத்திகளிலேயே பெருமளவிற்குத் தெளிவாகக் காணப்பட்டமைக்கு இயற்கை இறப்பர், செயற்கை இறப்பர், நைலோன் என்பனவற்றின் பன்னாட்டு விலைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையே காரணமாகும்.

### வலுவும் எரிபொருளும்

கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்பட்ட வலு மற்றும் எரிபொருளின் செலவு பெயரளவு நியதிகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தினால் அதிகரித்தது. 1995 இன் கைத்தொழில் வெளியீட்டில் வலுவின் பங்கு (மின்வலு எரிபொருள் மற்றும் ஏனையவை) 6 சதவீதமாக இருந்தது. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்களின் மொத்த உற்பத்திச் செலவில் முக்கிய மூலத்தினைக் கொண்டிருந்த சக்தி வலு இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளில் மிகக் குறைந்த பங்கினையே கொண்டிருந்தது.

## 4.5. முதலீடு

### வெளிநாட்டு முதலீடு

உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் முதலீடுகளுக்குமிடையிலுள்ள இடைவெளியை நிரப்புவதன் மூலமாக வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கினையாற்றுவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கான தூண்டுதலையும் வழங்குகின்றது. ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலிருந்து போட்டி காணப்பட்ட போதும் கடந்த சில ஆண்டுகளாக, முக்கியமாக யப்பான், தென்கொரியா, கொங்கொங், சிங்கப்பூர் சேர்மனி, அவுத்திரேலியா, இத்தாலி, இந்தியா, அ. ஐ. நாடுகள் ஆகிய நாடுகளிலிருந்து இலங்கை கணிசமான வெளிநாட்டு மூலதனங்களை கவரக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை 4.9**

**கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட வலுவும் எரிபொருளும் 1991 – 1995**


(ரூ.ப.இ.)

| வகைகள் | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு குடிபானங்கள் புகையிலை | 1,500 | 2,049 | 2,383 | 2,703 | 3,296 |
| 2. புடவைகள் அணியும் ஆடைகள் தோல்உற்பத்திகள் | 2,031 | 2,446 | 3,503 | 3,911 | 4,497 |
| 3. மரமும் மர உற்பத்திகளும் | 32 | 70 | 86 | 112 | 136 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 376 | 362 | 481 | 569 | 643 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 201 | 212 | 578 | 680 | 766 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 1,718 | 1,781 | 1,223 | 2,624 | 3,013 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 126 | 184 | 193 | 248 | 226 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 204 | 416 | 414 | 499 | 558 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 380 | 478 | 612 | 735 | 949 |
| மொத்தம் | 6,568 | 7,998 | 10,473 | 12,081 | 14,084 |

(அ) தற்காலிகமானவை　　　　　　　　　　　　　　　　மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள முக்கிய நிறுவனமாக முதலீட்டுச்சபை, நாட்டிற்குள் வெளிநாட்டு முதலீடுகளின் பாய்ச்சலை வசதிப்படுத்துகின்ற “ஒருமுகப்படுத்தப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நிலையமாக” தொழிற்படுகின்றது. 1995 இல் முதலீட்டுச்சபையின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் முக்கிய அம்சமாக கொழும்பில் நடாத்தப்பட்ட முதலீட்டுப் பேரவைக் கூட்டம் விளங்கியது. இது வேளாண்மைப் பொருட்கள் புடவைகள், தோல், இறப்பர், மட்பாண்டம், மின்னியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியதுறைகளில் கூட்டு தொழில் முயற்சிகளுக்கும் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்குமாக தயாரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முன்மொழிவுகள் மீதான ஒன்றுக்கொன்றான வியாபார கூட்டங்களை நடத்துவதற்கு உதவியது.

1995 இல் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையிலும் முதலீடுகளின் அளவிலும் பின்னடைவு காணப்பட்டது. பிரிவு 17 இன்கீழ், முதலீட்டுச் சபை 1994 இல் ஒப்புதல் வழங்கிய ரூ. 43 பில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளைக் கொண்ட 291 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 32 பில்லியன் முதலீட்டுப் பொறுப்புக்களைக் கொண்ட 224 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தமையின் மூலம் 1995 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1,773 ஆகியது. 1995 இல், பெருமளவு எதிர்கால முதலீடுகளின் உள்ளார்ந்த வளங்களுடன் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு நன்கு நிறுவப்பட்ட பல பன்னாட்டுக் கூட்டு நிலையங்களை இலங்கை கவர்ந்துள்ளது. 1995 இல் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளில் வெளிநாட்டுக்கூறு ரூ. 14 பில்லியனாக அல்லது இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த முதலீட்டில் 43 சதவீதமாக இருந்தது. 1995 இறுதிவரை ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த செயற்றிட்டங்களில் 1,132 செயற்றிட்டங்கள் தொடர்பாக முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டுள்ளன. இவற்றில், இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள 150 செயற்றிட்டங்கள் உட்பட 756 தொழில் முயற்சிகள் 1995 இறுதியில் ரூ. 77 பில்லியன்களை முதலீடு செய்துள்ளன. இம் முதலீட்டில் வெளிநாட்டுக்கூறு ரூ. 52 பில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 68 சதவீதமாக இருந்தது. இம் முதலீடுகளை ஈர்த்துக்கொண்ட முக்கிய கைத்தொழில் வகைகளாக புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் மற்றும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் என்பன காணப்பட்டன.



வரைபடம் 4.3
முதலீட்டுச் சபையின் முதலீட்டு ஒப்புதல்களும் பெறப்பட்ட முதலீடும் 1991 – 1995

அட்டவணை 4.10

முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளில் உண்மையான முதலீடுகள் (அ)

| | தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | | வெளிநாட்டு முதலீடுகள் (ரூ.ப.இ.) | | மொத்த முதலீடு (ஆ) (ரூ.ப.இ.) | |
|---|---|---|---|---|---|---|
| | 1994 | 1995 (இ) | 1994 | 1995 (இ) | 1994 | 1995 (இ) |
| 1. உணவு குடிபானங்கள் புகையிலை | 43 | 53 | 667 | 1,290 | 1,183 | 1,974 |
| 2. புடவைகள் அணியும் ஆடைகள் தோல்உற்பத்திகள் | 101 | 109 | 11,585 | 11,064 | 12,675 | 12,821 |
| 3. மரமும் மர உற்பத்திகளும் | 15 | 17 | 449 | 488 | 479 | 550 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 7 | 9 | 167 | 167 | 270 | 362 |
| 5. இரசாயனம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் , | 50 | 52 | 4,687 | 4,945 | 5,193 | 5,633 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 38 | 39 | 652 | 774 | 2,189 | 2,346 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 16 | 19 | 472 | 615 | 621 | 978 |
| 8. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 79 | 91 | 2,981 | 2,919 | 3,635 | 4,068 |
| 9. பணிகள் | 165 | 217 | 20,221 | 28,108 | 33,564 | 43,487 |
| மொத்தம் | 514 | 606 | 41,881 | 50,370 | 59,809 | 72,219 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) ஆண்டு முடிவில் உள்ளவாறு
(ஆ) முதலீட்டுச்சபைச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்
(இ) தற்காலிகமானவை

1995 இல் முதலீட்டுச் சபை உண்ணாட்ட ரசிறை மற்றும் வரி தொடர்பான சட்டங்களின்கீழ் (பொது ஊக்குவிப்புத் திட்டம்) 62 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ. 3.2 பில்லியனாக காணப்பட்ட வேளையில் இதில் வெளிநாட்டுக் கூறு ரூபா 1.5 பில்லியன் அல்லது 46 சதவீதமாகும்.

முதலீட்டுச் சபையின் வெளிநாட்டு முதலீட்டிற்கான புதிய ஒப்புதல்களில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் இருநூறு ஆடைத் தொழிற்சாலைச் செயற்றிட்டங்களை உள்ளடக்கிய முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளிலுள்ள தொழில்நிலை 1994 இன் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் 13 சதவீதத்தினால் அதிகரித்தது. தற்போதுள்ள கைத்தொழில்களின் இயலளவில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதிகரித்த உற்பத்தி மட்டங்களும் தொழில்நிலை உயர்வடைய உதவின.

## உள்நாட்டு முதலீடுகள்

முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் கணிசமானளவு உள்நாட்டு முதலீடுகள் காணப்பட்டன. முதலீட்டுச் சபையின் கீழ் தொழிற்படும் 756 செயற்றிட்டங்களில் உள்நாட்டு முதலீடுகளின் பங்கு 1995 இறுதியில் ரூ. 25 பில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 32 சதவீதமாகக் காணப்பட்டது. இம்முதலீடுகள் முக்கியமாக சிறுவர்களுக்கான மென் விளையாட்டுப் பொருட்கள் நூல் மற்றும் புடவைகள், மரக் கைப்பணிப் பொருட்கள், பழவகை, காய்கறிகள் பதனிடல், சமையலறைப் பாவனைப் பொருட்கள், தொலைத் தொடர்பூட்டல் கருவிகள், ஆடைகளுக்கான துணைப்பொருட்கள் என்பனவற்றின் மீது காணப்பட்டன. 1995 இன் ரூ. 32 பில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளில் ரூ. 18 பில்லியன் அல்லது 57 சதவீதத்தினை உள்நாட்டு மூலங்களிலிருந்து உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும் பொது ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் முதலீட்டுச் சபை செயற்றிட்டங்களில் உள்நாட்டு முதலீட்டுக்கூறு ரூ. 1.7 பில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 54 சதவீதமாக இருந்தது.

அதேவேளை, 1995திசெம்பர் இறுதியிலுள்ள வாறு, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள 1,578 தொழில் முயற்சிகளின் மொத்த முதலீடு ரூ. 81.1 பில்லியனாக விளங்கியது. இம்முதலீடுகளை ஈர்த்துக்கொண்ட முக்கிய கைத்தொழில் வகைகளாக இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் மற்றும் உணவு குடிபானம், புகையிலை என்பன விளங்கின. இத்தொழில் முயற்சிகள் 300,036 பேருக்கு தொழில்வாய்ப்பினை உருவாக்கியுள்ளன.

அட்டவணை 4.11

**முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும்**
**1994 - 1995**

| வகைகள் | 1994 | | 1945(அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (இ) (க.ஏ.பெ.) (ப. இ. ரூ.) | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.ஏ.பெ.) (ப. இ. ரூ.) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 4,105 | 2,929 | 8,159 | 3,957 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 144,131 | 60,820 | 153,664 | 73,007 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் | 1,074 | 158 | 2,500 | 288 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 459 | 616 | 519 | 574 |
| 5. இரசாயனம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 13,378 | 7,903 | 19,020 | 12,200 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 8,146 | 4,502 | 9,160 | 6,120 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 887 | 354 | 1,252 | 722 |
| 8. வேறெங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 23,433 | 7,200 | 23,761 | 9,166 |
| 9. பணிகள் (ஆ) | 10,047 | 3,553 | 15,332 | 6,919 |
| மொத்தம் | 205,660 | 88,035 | 233,367 | 112,953 |

மூலம் : இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானவை.
(ஆ) வரையறுக்கப்பட்ட "ஏயர் லங்கா" நீங்கலாக.

### 4.6. கைத்தொழில் அமைவு

கைத்தொழில் அபிவிருத்தி ஒரு சில மாவட்டங்களிலேயே குவிந்துள்ளமையை கைத்தொழில் அமைவிடங்களின் பரம்பல் காட்டுகின்றது. எனவே அண்மைக்கால அரசாங்கக் கொள்கையானது பிரதேச ரீதியான கைத்தொழில் மயமாக்கலை வலியுறுத்துகின்றது. பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தல், முக்கிய கைத்தொழில் பகுதிகளிலுள்ள நெருக்கடிகளைக் குறைத்தல், மத்தியை நோக்கி நகர்வதனை ஊக்கம் குன்றச் செய்தல், தொழிலற்ற கிராமத்தவர்க்கு தொழில்வாய்ப்புக்களை அதிகரித்தல் என்பனவே பிரதேச ரீதியான கைத்தொழில் மயமாக்கலின் முக்கிய குறிக்கோளாகும்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில்களில் 77 சதவீதம் அல்லது 1,211 தொழில் முயற்சிகள் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வேளையில் 11 சதவீதம் அல்லது 171 தொழில் முயற்சிகள் கம்பகா மாவட்டத்தில் காணப்பட்டன.

1995 இறுதியில், முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் வர்த்தக தொழிற்பாட்டிலுள்ள 534 கைத்தொழில்களில் 35 சதவீதம் அல்லது 187 தொழில் முயற்சிகள் கொழும்பு மாவட்டத்திலும் 45 சதவீதம் அல்து 239 தொழில் முயற்சிகள் கம்பகா மாவட்டத்திலும் அமைந்துள்ளமைக்கு பியகம, கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தமையே முக்கிய காரணமாகும்.

முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் 1995 இறுதியில் வர்த்தகத் தொழிற்பாட்டிலிருந்த 333 தொழில் முயற்சிகளில் 193 அல்லது 58 சதவீதமானவை கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வேளையில் 73 அல்லது 22 சதவீதமானவை கம்பகா மாவட்டத்தில் அமைந்துள்ளமைக்கு உட்கட்டமைப்பு வசதிகள் கவனத்தில் கொள்ளப்பட்டமையே முக்கிய காரணமாகும். பிரிவு 16 இன் கீழ் முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் குறிப்பிடத்தக்கதொரு பண்பு யாதெனில் மொனராகலை, திருகோணமலை, அம்பாந்தோட்டை, மாத்தறை, மாத்தளை போன்ற அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களில் குறிப்பிட்ட சில தொழில் முயற்சிகள் அமைந்திருந்தமையேயாகும்.

இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1995 இறுதியில் 21 மாவட்டங்களில் 160 ஆடைத் தொழிற்சாலைகள் தொழிற்பாட்டி

### அட்டவணை 4.12

### கைத்தொழில் முயற்சிகளின் பிரதேசவாரியான பரம்பல் (அ)

(எண்ணிக்கை)

| | மாவட்டம் | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில்கள் | முதலீட்டுச் சபையின் கீழான கைத்தொழில்கள் | | பிரிவு 16 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | பிரிவு 17 | 200 ஆடை தொழிற் சாலை நிகழ்ச்சித் திட்டம் | | |
| 1. | கொழும்பு | 1,211 | 187 | 16 | 193 | 1,607 |
| 2. | கம்பகா | 171 | 239 | 7 | 73 | 490 |
| 3. | களுத்துறை | 45 | 18 | 10 | 14 | 87 |
| 2. | காலி | 26 | 22 | 6 | 14 | 68 |
| 5. | கண்டி | 30 | 15 | 12 | 8 | 65 |
| 6. | புத்தளம் | 17 | 16 | 12 | 10 | 55 |
| 7. | குருநாகல் | 9 | 12 | 11 | 7 | 39 |
| 8. | மாத்தறை | 19 | 2 | 4 | 1 | 29 |
| 9. | அம்பாந்தோட்டை | 22 | 1 | 7 | 1 | 27 |
| 10. | இரத்தினபுரி | 18 | 6 | 14 | 3 | 24 |
| 11. | நுவரெலியா | 1 | 6 | 11 | 3 | 23 |
| 12. | பதுளை | 3 | 3 | 7 | 3 | 22 |
| 13. | அநுராதபுரம் | 9 | 1 | 14 | 1 | 21 |
| 14. | கேகாலை | 5 | 3 | 8 | 0 | 13 |
| 15. | மாத்தளை | 2 | 2 | 5 | 0 | 11 |
| 16. | அம்பாறை | 4 | 0 | 3 | 0 | 7 |
| 17. | மொனராகலை | 4 | 0 | 5 | 1 | 7 |
| 18. | பொலன்னறுவை | - | 1 | 4 | 0 | 5 |
| 19. | வவுனியா | - | 0 | 2 | 0 | 2 |
| 20. | திருகோணமலை | - | 0 | 1 | 1 | 2 |
| 21. | மட்டக்களப்பு | - | 0 | 1 | 0 | 1 |
| | மொத்தம் | 1,578 | 534 | 160 | 333 | 2,605 |

(அ) 1995 இறுதியில் உள்ளபடி.

மூலங்கள் : கைத்தொழில், அபிவிருத்தி அமைச்சும் இலங்கை முதலீட்டுச் சபையும்

லிருந்தன. இவற்றில் 86 சதவீதம் அல்லது 137 ஆடைத் தொழிற்சாலைகள் கொழும்பு, கம்பகா மாவட்டங்களுக்கு வெளியிலேயே அமைந்திருந்தன. அநுராதபுரம், இரத்தினபுரி, கண்டி, புத்தளம் மற்றும் குருநாகல் போன்ற அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களில் தொழிற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கைகள் முறையே 14.14.12 மற்றும் 11 ஆகக் காணப்பட்டன.

கிராமப் பகுதிகளில் கைத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும் சில அமைவிடங்களில் கைத்தொழில்கள் மிகையாகக் குவிவதன் காரணமாக ஏற்படும் சுற்றாடல் மாசுபடுதல், தேகநலம் என்பனவற்றுடன் இணைந்துள்ள தாக்கங்களையும் பிரச்சினைகளையும் குறைப்பதற்காகவும் 1995 இல் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டம் சீதாவாக்க கட்டான ஆகிய இடங்களிலுள்ள இரு பன்னாட்டு தரத்திலான கைத்தொழில் பேட்டைகளையும் உள்ளடக்குகிறது. இவ்விரு கைத்தொழில் பேட்டைகளுடனும் தொடர்பான ஆரம்ப வேலைகள் யப்பானிய அரசின் உதவியுடன் 1995இல் தொடங்கின. அத்துடன் 21 பிரதேச ரீதியான கைத்தொழில் பேட்டைகளுக்கான அமைவிடங்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 1995 இல் இதன் ஆரம்ப அபிவிருத்தி வேலைகள் தனியார்துறையினால் பொறுப்பேற்கப்பட்டன. அநுராதபும், புத்தளம்,. மொனராகலை , பதுளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை முறையே 4, 4, 2, 2 மற்றும் 2 ஆக விளங்கின.

## 4.7. கைத்தொழில் கொள்கை

1994 இல் தொடங்கப்பட்ட அரசின் கைத்தொழில் கொள்கையின் முதன்மைக் குறிக்கோள்கள் சந்தை சார்ந்த தன்மை, அதிகரித்த வினைத்திறன், வெளிநாட்டு உள்நாட்டு முதலீடுகளைத் தூண்டுதல், கைத்தொழில்களைப் பன்முகப்படுத்தல் என்பனவற்றினூடாக அடிப்படையில் உறுதியான கைத்தொழில் வளர்ச்சியை எய்துவதேயாகும். மூலதனச் சந்தையில் வட்டி வீதங்கள் தீர்மானிக்கப்படுகின்ற, பணவீக்கம் குறைவாக

இருக்கின்ற கைத்தொழில் அபிவிருத்திகளுக்கு சாதகமான செலாவணி வீதங்களைக் கொண்டுள்ள, தொழிலாளர் சந்தைகள் சுமுகமாகத் தொழிற்படக்கூடிய மற்றும் போட்டி விலைகளைக் கொண்டுள்ள உறுதியானதொரு பேரண்டப் பொருளாதாரத்தினூடாகவே இக்குறிக்கோள்களை அடையலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இவ்வரைச் சட்டத்தினுள் புதிய தொழில்நுட்பங் களையும், ஏற்றுமதிச் சந்தைகளையும் பெறுவதற்கான வழிகளைத் தொடர்ச்சியாக வழங்குகின்றதான நடவடிக்கைகளுக்கு முக்கியமாக உதவும் விதத்தில் வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

உள்நாட்டுத் துறையிலுள்ள பல தயாரிப்புத் தொழில் முயற்சிகள் தீர்வை மற்றும் தீர்வையல்லாத் தடைகளுக்குப் பின்னால் அபிவிருத்தியடைந்து தொழிற்பட்டுக் கொண்டிருப்பதன் காரணமாகவும் நாடு பாதுகாப்புக்கான தாழ் மட்டத்தை நோக்கி நகர்வதாகத் தொழிற்பட்டுக்கொண்டிருப்பதன் காரணமாகவும் இந்த நிறுவனங்களின் செயல் திறனை அதிகரிக்கச் செய்து அவற்றினை கைத்தொழில் வளர்ச்சியின் முதன்மை நீரோட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக வேண்டி வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் தீர்வை சீரமைப்புக்களினூடாக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவற்றின் விளைவாக பலவிடயங்கள் மீதான இறக்குமதித் தீர்வை 1994 இன் உயர்ந்த தீர்வைப் பிரிவுகளிலிருந்து 1995 இல் குறைந்த பிரிவுகளுக்குக் குறைக்கப்பட்டது. 1998 இல் ஒருமுகப்படுத்தப்பட்ட 15 சதவீத இறக்குமதித் தீர்வையை நோக்கி அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும், வேறுபட்ட நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் உற்பத்திகளின் வேறுபட்ட கட்டங்களில் மொத்த விற்பனை தொடர்பாக பல்நிலை வரிவிதிப்பினைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கூட்டப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் கணிக்கப்படும் பொருட்கள் பணிகள் வரி மிக விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

கைத்தொழில் அபிவிருத்திக்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தினை ஏற்றுக்கொள்ளுகின்ற விதத்தில் இத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் பல உறுதியான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. கைத்தொழில்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக தேகநலம், கல்வி, விடுமுறைக்காலப் பயிற்சி, சுற்றாடல், கிராமிய உட்கட்டமைப்புபோன்ற துறைகளில் அரசாங்கம் மூலதனத்தை முக்கியமாக முதலீடு செய்யும் வேளையில் வலு, தொலைத் தொடர்பூட்டல்கள், நெடுஞ்சாலை மற்றும் நீர் வழங்கல் என்பனவற்றிற்கான நிதியிடல் சொந்தமாக - கட்டி தொழிற்படுத்தி உடைமையாக்கல் அல்லது கட்டி-தொழிற்படுத்தி-மாற்றல் செய் என்ற அடிப்படையில் தனியார் துறையின் பங்களிப்புடன் மேற்கொள்ளப் படும். உட்கட்டமைப்பு வசதிகள் செயற்றிட்டத்தினை மேம்படுத்துவதற்கான தனியொரு பணி நிலையமாக முதலீட்டுச் சபையினை வலுப்படுத்தும் பொருட்டு 1995 செத்தெம்பரில் முதலீட்டுச் சபையுடன் இணைக்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிறுவனத்திற்கான செயலகம், வலு, தொடர்பூட்டல்கள், போக்குவரத்து, துறைமுகங்கள், கழிவு நீர் போக்கிகள், கழிவுப் பொருள் அகற்றுதல், பல்கூட்டு கடைத்தொகுதிகளின் கட்டுமானம் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுதல் என்பனவற்றிலுள்ள பாரிய செயற் திட்டங்களைக் கையாள எதிர்பார்த்திருக்கின்ற வேளையில், சொந்தமாகக் கட்டி தொழிற்படுத்தல் மற்றும் கட்டி-தொழிற்படுத்தி-மாற்றல் செய்யும் ஒழுங்குகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. இவற்றினைப் பொறுத்தவரையில், இவ்வுட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியமொன்றினை ஏற்படுத்துவதுபற்றி கவனம் செலுத்தப்படும்.

தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் திறமை அதிகரிப்பு விடயத்தில், அறிவியல் தொழில்நுட்ப அமைச்சு ஆய்வு அறிவியலாளர், பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் போன்றவர்களிடையே யான தொழில்நுட்ப, மற்றும் திறமை அபிவிருத்தி என்பனவற்றின் குறைபாடுகளை நீக்கும் முகமாக மனித மூலவள அபிவிருத்திச் சபையினூடாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும் அரசாங்கம் தனது 1996 வரவு செலவுத் திட்ட உரையில் உயர்ந்த கூட்டப்பட்ட பெறுமதிகளைக்கொண்டதும், உயர்ந்த தொழில்நுட்பங்களைக் கொண்டதுமான கைத்தொழில்களின் பன்முகப்படுத்தலை மேற்கொள்ளக்கூடிய மேம்பட்ட தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமான வரி மற்றும் இறக்குமதித் தீர்வைச் சலுகைகளை உள்ளடக்கிய ஊக்குவிப்புத் தொகுதியொன்றினை அறிவித்தது. இவ்வுயர்ந்த ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், தயாரிப்பு மற்றும் பணிகள் துறையில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்ற, உற்பத்தி மூலதனத்தின் குறைந்தது ரூ. 100 இலட்சத்தினை முதலீடு செய்துள்ள 50 ஊழியர்களுக்குமேல் தொழில் வாய்ப்பினை வழங்கியுள்ள புதிய கூட்டு நிலையங்களுக்கு

ஐந்தாண்டுகால வரிவிடுப்பு வழங்கப்பட்டுள்ளது. மேம்பட்ட தொழில்நுட்பத்தினை ஊக்குவிப்பதற்கான அதே ஊக்குவிப்புத் தொகுதியானது தயாரிப்புத்துறையிலும் பணிகள் துறையிலும் ஏற்கனவேயுள்ள கூட்டு நிலையங்களுக்கும் பணவீக்கங்களுக்கேற்ப ஆண்டுதோறும் சீராக்கப்பட்ட அவர்களின் அதிகரித்த இலாபங்களின் அடிப்படையில் விரிவாக்கப்பட்டது. பொறிகளில் ரூ. 100 இலட்சத்திற்கு மேலாக முதலீடுகளை மேற்கொள்ளுகின்ற கூட்டுநிலையங்களுக்கு தீர்வையற்ற இறக்குமதிகளும் மொத்த விற்பனவு வரி விலக்களிக்கப்புக்களும் வழங்கப்படவுள்ளதுடன் பொறிகள் மற்றும் கருவிகளில் ரூ. 25 இலட்சத்திற்கு மேல் முதலீடு செய்துள்ள ஏற்கனவேயுள்ள கூட்டு நிலையங்களுக்கும் இதே ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட உள்ளன. தற்போதுள்ள சலுகைகளுக்கு மேலதிகமாக, பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மீது உயர்ந்த தொழில்நுட்பத்தையும் குறைந்தது ரூ. 500 இலட்சத்திற்கு மேற்பட்ட முதலீட்டையும் 50 ஆட்களுக்கு மேலான தொழில் வாய்ப்பினையும் கொண்டுள்ள முதலீட்டுச் சபையின் ஏற்றுமதி சார்ந்த கூட்டு நிலையங்களுக்கு ஐந்தாண்டு வரிவிடுப்பும் வழங்கப்பட்டது. முதலீட்டுத் தொகை மற்றும் உருவாக்கப்பட்ட தொழில்நிலை என்பனவற்றினைப் பொறுத்து பாரிய அளவு அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு 10 தொடக்கம் 20 ஆண்டுகால வரிவிடுப்பு வழங்கப்படவுள்ளது.

முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளுக்கு கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையை வழங்குவதற்காக வும், இலங்கையை பிரபல்யமான பன்னாட்டு சந்தை நிலையமாக மேம்படுத்துவதற்காகவும் நாட்டிற்குள் புடவைகளும், ஆடைகளும் களவாக கடத்திவருவதனை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவும் 1995 சனவரியில், முதலீட்டுச் சபையின்கீழ் தொழிற்படும் ஆடைக் கைத்தொழில்களின் வெளியீட்டில் 10 சதவீதத்தினை உள்ளூர் சந்தைக்கு விடுவிப்பதற்கான அனுமதியினை வழங்குவதற்கு அரசு தீர்மானித்தது.